உ
சிவமயம்

நெடுந்தீவு மேற்கு
கரமத்தைப் பதியில் திருக்கோயில் கொண்டெழுந்தருளிய



ஸ்ரீ முருகவடிவேற் பெருமான்
பேரில் பாடிய

# திருவூஞ்சலும் ஸ்தல புராணமும்


ஆக்கம்:
அமரர் திரு.ஆ.சுப்பிரமணியம் (செல்லத்துரை)
தலைமையாசிரியர்.

உ
கடவுள் துணை

# எட்டிக்குடியேசல்

## வெண்பா

மாசில் முருகேசரும் மாது தெய்வயானையும்
ஏசநேரிட்டதையான் பாடவே - காசினியிற்
செஞ்சடில ஐந்துகரத் தேவன் கயமுகத்தோன்
கஞ்ச மலர்த்தாளிணையே காப்பு.

காசினி யோர் புகழும் எட்டிக்குடி வேலவர்
கதவைத்திறக்கு மேசற்பாட - எழில்
கதவைத்திறக்கு மேசற்பாட

மூஷிகவாகன மீதேறும் விநாயகன்
முளரி மலரடியேகாப்பு - எழில்
முளரி மலரடி யேகாப்பு.

## பொது

செய்யவடிவேல் முருகர் வருகிற
செய்தியறிந்தாளே மாது தெய்வ
யானையறிந்தாளப் போது.

பரிவுடன் வடிவேல் முருகர் வருவாரென்று
படக்கென்றடைத்தாராம் கதவை - அம்மை
சடக்கென்றடைந்தாராம் கதவை.

அடைத்த கதவுந்தெரியாமல் முருகர்
ஆசையினால் மதிமயங்கி - அம்மை
ஆசையினால் மதிமயங்கி.

விரைவினில் வந்து தடதடவென்று
தட்டினார் கையினாற்றானே - கதவை
தட்டினார் கையினாற்றானே.

**சுவாமிக்குரியது**

எந்தன் கண்மணியே அறியாள்போல் வினாவுறாய்
எட்டிக்குடி வேலவன் - நான்தான் பெண்ணே
02 எட்டிக்குடி வேலவன் நான்தான்

நின்முகமதி யொளியைக் கொண்டுவந்தேன்
என் மாதரசே யிந்தவேளை - எழில்
04 மாதரசே யிந்தவேளை.

கட்டழகியுன்னை மனதில் நினைத்ததும்
காதம் அரை நாழிகையாச்சே - இரு
06 காதம் அரை நாழிகையாச்சே.

அந்தவள்ளியைவிட்டு உந்தன் முகத்தைக்காண
ஆசைகொண்டோடி வந்தேனே - கண்ணே
08 ஆசைகொண்டோடி வந்தேனே.

வேணுமென்றதெல்லாம் நானிப்போ தருகிறேன்
விரைவுடன் சொல்லுவாய் பெண்ணே - உள்ளக்
10 கனிவுடன் கூறுவாய் கண்ணே.

நேச மில்லாதவள் போலும் நீ பேசுகிறாய்
நித்திரைமயக்கமோ பெண்ணே - உனக்கு
12 வேலன்பத்தியிற் கலக்கமோ கண்ணே.

போம் என்று நீர் சொல்ல நியாயமல்லப் பெண்ணே
போனால் என்ன கெட்டுப் போகும் - கண்ணே
14 போனால் என்ன கெட்டுப் போகும்.

கேட்கச்சொல்லி உன்னை யாரடிக்கிறாரிப்போ
கேவல மெனையிகழாதே - பெண்ணே
16 கேவலமெனையிகழாதே.

என்னை இனியணைத்தால் உன்னைப் பிரியேன் என்று
உறுதிகள் கூறுவேன் பெண்ணே - நல்ல
18 அறுதிகள் கூறுவேன் கண்ணே

வார்த்தைபழக்கிட வல்லன் அல்லப் பெண்ணே
மனதினிற் கோபங் கொள்ளாதே - உன்தன்
20 மனதினிற் கோபங் கொள்ளாதே.

கன்னியே உன்மனம் இரங்காது போமெனில்
கால்களும் வலிக்குமே பெண்ணே - என்தன்
22 கால்களும் வலிக்குமே கண்ணே.

மயிலே குயிலேஎன் மாணிக்கமே வந்து
மண்டபந் திறந்திடுவாயே - பெண்ணே
24 மண்டபந் திறந்திடுவாயே.

குன்றக் குடியிலன்று காணிக்கையாக வைத்த
கொலிசுகள் உண்டு நான்தருவேன் - பெண்ணே
26 கொலிசுகள் உண்டுநான் தருவேன்.

தைப்பூச நாளினிற் காணிக்கையாய்த்தந்த
தண்டைகள் உண்டுநான் தருவேன் - பெண்ணே
28 கொண்டு களிப்புடன் வருவீர்.

சித்திராபூரணையில் சேர்த்து வைத்திருக்கிற
செல்வந்திமாலைகள் தருவேன் - பெண்ணே
30 சீற்றம் தணிந்து நீர்சேரும்.

இந்திர லோகத்து வெள்ளை யானைவந்திருக்குது
இதனை உமது கண்ணாற் பாரும் - என்தன்
32 மனதின் புண்ணைச்சற்றே தீரும்.

இந்தக்கத வினைத்திறக்கவே மந்திரம்
இருக்கிறதென்னிடந்தானே - கண்ணே
34 நீரும் சிரித்திடக் காட்டுவன் நானே.

ஐந்துடனா றெழுத்துந்தியே தட்டிட
ஆ வென்று திறந்தேதாழும் - மெல்ல
36 ஓ வென்று வந்தனள்காரும்.

திறந்திடு பொழுதினிற் தேவர் பூச்சொரிந்திடத்
தெய்வானையம்மனும் சேர்ந்தார் - வையம்
உய்யவே வேலன் பால் சாந்தார்.

**அம்மனுக்குரியது**

01 செண்பகவதியென்று கதவைதட்டியதட்டி
திறவென்று சொன்னவராரோ - இந்த
தெருவினில் வந்தவராரோ

03 எட்டிக்குடியை விட்டு இரவினில் விரைவிலே
எப்படிவந்தீர் சொல்லும் சுவாமி - நீர்
எப்படி வந்தீர் சொல்லும்சுவாமி

05 இந்த வேளையிரு காதவழியினை
எவ்விதம் நடந்து வந்தீரோ - சுவாமி
எவ்விதம் நடந்து வந்தீரோ

07 அரைநாழி யேனும் விட்டுப்பிரியாள்வள்ளி
அறியாமல் ஓடிவந்தீரோ - அன்றித்
தெரியாமல் ஓடிவந்தீரோ.

09 காண வந்ததிலென்ன காரியம் கெட்டுது
தைப்பொருள் கொண்டுவந்தீரோ- சுவாமி
காணிக்கை கொண்டு வந்தீரோ.

11 சொல்லுவதொன்றில்லை உமது பொருளும் வேண்டாம்
துரிதத்தில் போம் நேயாள்வீடே - சுவாமி
துரிதத்தில் போம் நேயாள்வீடே.

13 நித்திரையில் விட்டு நீர் நினைவில் வருவீரென்று
நினைத்திருப்பாள்வள்ளி போம் போம் - சுவாமி
நினைத்திருப்பாள் வள்ளி போம் போம்.

15. கெட்டுப் போகாதிந்தச் சட்டக்கல்விகளெல்லாம்
கேட்கநீரார் சொல்லுஞ்சுவாமி - இங்கு
கேட்கநீரார் சொல்லுஞ்சுவாமி.

17 இகழவும் புகழவும் என்னாலாகாதந்த
இனிய வள்ளிக்கே யொக்குந்தானே - சுவாமி
இனியவள்ளிக்கே யொக்குந்தானே.

19 மண்டலம் புகழ் வடிவே லேந்து முருகரே
வார்த்தை பழக்க வந்தீரோ - நல்ல
வார்தை பழக்க வந்தீரோ.

21 போதும் போதும் இந்த உபசாரவார்த்தைகள்
போதிக்கவந்தீ ரோசுவாமி - இப்போ
போதிக்க வந்தீ ரோசுவாமி.

23 முள்ளுமிதிதடி முனை மேலே நிற்பாற்கு
முந்திக்கால் வலிக்கு மோசுவாமி - உங்கள்
தந்திர வித்தை யோசுவாமி

25 கதவைத்திற வென்று பதனமாய்ப் பேசுறீர்
கைப் பொருள் கொண்டுவந்தீரோ - சுவாமி
உங்கள் செப்படி வித்தைகள் தானோ.

27 பஞ்சணை தன்னிலே கொஞ்சி யிருந்தவள்
பாதத்திலிட்டு நீர் பாரும் - நல்ல
சோதிப் பிரபையைப் பாரும்

29 வைப்பாட்டி வள்ளியின் கூட்டுக்குச் சென்றநீர்
வைத்தவள் காலுக்குப் பாரும் - அவள்
சித்தமாயிருந் திடச் சேரும்

31 தேவதேவா இந்தப் பூருவ நகைகளைத்
திருடி எடுத்து வந்தீரோ - சுவாமி
கருதி யெடுத்து வந்தீரோ

33 கண்ணினாற் பார்ப்பதென் பெண்ணாய் வளர்த்தெனை
காத்துக் கொடுத்துங்கள் கையில் - நல்ல
கூத்திக்குப் போகவோ சுவாமி

35 தட்டிக்க வினைத் திறந்திடில் உம்மை நான்
தழுவியணைகு வேன்சுவாமி - உம்மை
கொழுவிப் பிணைகு வேன்சுவாமி

* * *

உ

நெடுந்தீவு மேற்கு

கரமத்தைப் பகுதியில்

# திருக்கோவில் கொண்டெழுந்தருளிய ஸ்ரீ முருகவடிவேற் பெருமான்மீது பாடப்பட்ட

# ஸ்தல புராணம்

## காப்பு

விக்கின விநாயகனே வேழமுகத் தைங்கரனே
புக்குணர்வார் புந்தி புகுபவனே – நெக்குருகி
கந்தன்மேல் நாயேன் கவிபாட எந்தனுக்கு
வந்துதவி செய்வாய் மகிழ்ந்து.

எந்தமது சிந்தைபிரியாத பெருமானென இறைஞ்சி இமையோர்
வந்துதுதி செய்ய வளர்தூப மொடுதீபம் நிகழ்வாய்மையதனால்
அந்தியமர் சந்திபல அர்ச்சனைகள் செய்ய அமர்கின்ற அழகன்
கந்து கடல்சூழ் நெடுந்தீவுதனில் மேவுபதி கரமத்தையதுவே.

கருணையே வடிவான கண்கள் பன்னிரண்டி னாலே
இருவினை களைந்த மேலோர்க்கினிய வானந்த மெல்லாம்
வரன்முறை பெருக்கி அன்னான் மனமெனுங் கோயிற்றாண்டாத்
திருவிளக்கொளியாய் வைகும் திருக்கரமத்தை முதலே போற்றி

போற்றியெம் பெருமபோற்றி புரந்தாற் கபயங் காத்து
கூற்றெனும் கொடியசூரைக் குலத்தொடும் அழித்தாய்போற்றி
நாற்றிசை புகழும் நன்னீர் நாடெனும் கரமத்தையுள்
போற்றினர்க் கருளும் வண்ணம் புகுந்துறை குமர போற்றி.

கந்தனே போற்றி எந்தன் கரமத்தை முதலே போற்றி
சிந்தையின் நிறைவே போற்றி திகழ்ஒளி வடிவே போற்றி
அந்தமில் அவுணர்தம்மை அழித்திட்ட அமர போற்றி
வந்துனை அடைந்தோர்க் கெல்லாம் வாழ்வருள் மருந்தேபோற்றி.

வள்ளிதன் மணாள போற்றி மதகரி யுரித்த பெம்மான்
தெள்ளொளி விளங்கும் ஞானத் திருவிழி யதனிற் றோன்றி
பள்ளிகொள் இடமாக் கொண்ட பண்பமை கரமத்தையில்
அள்ளிநற் கருணை வீசும் அருட்பெருங் கடலே போற்றி

நண்ணுதற் கினியாய் போற்றி நலங்கெழு தெய்வயானை
கண்ணுறப் பொருந்தும் வண்ணம் கலந்துறை குமரபோற்றி
விண்ணுறை தலைவன் ஏத்தும் வேற்படை விமலாபோற்றி
கண்ணுதற் பெருமான் நல்கும் கரமத்தைக் கந்தாபோற்றி.

சிந்தனைக் கரியாய் போற்றி திகழறு முகத்தாய்போற்றி
வந்துனை அடைந்தோர்க் கெல்லாம் வரமருள் மருந்தேபோற்றி
பந்தம தகலா நாயேன் படுந்துயர் களைவாய்போற்றி
கந்தனே போற்றி எந்தன் கரமத்தை முதல்வபோற்றி.

பன்னிரு கரத்தாய் போற்றி பதமலர் தொழுவோர்க்கெல்லாம்
முன்னிரு வினைகள் தீர்க்கும் முகமுடை முதல்வபோற்றி
என்னிரு வினைகள் தீர்க்க எழில்நிறை கோயிலூடு
தன்னிக ரில்லாத் தேவன் தங்கிய தகைமைத்தென்னா.

* * *

உ

*கணபதி துணை*

## நெடுந்தீவு மேற்கு, நெழுவினி

# சித்தி விநாயகர் திருவூஞ்சல்

காப்பு

சீர்பூத்த வேதசிவா கமங்க ளோங்கி
திகழுமியாழ்ப் பாணநகர்க் கொருசார்பாகி
நீர்பூத்த நெடுந்தீவிற் குடபா லோங்கு
நெழுவினியிற் சித்திவிநா யகர்தம் மீதிற்
பேர்பூத்த ஊஞ்சலிசை யினிது பாடப்
பிறைபூத்த சடைமலிவுப் பிரானார் தந்த
கார்பூத்த வறிவிச்சை தொழிலென் றோதுங்
கடம்பூத்த கணபதிதாள் காப்ப தாமே.

பூமேவு நான்மறையுங் கால்க ளாகப்
புரையிலும வேதமெழிற் சட்ட மாக
பாமேவு முபநிடதம் பலகை யாகப்
பரவுமெண் கலைகளுயர் கயிற தாக
மாமேவு சிவாகமே விட்ட மாக
மருவு பிரணவமாகும் மஞ்ச மீது
தேமேவு சோலைநெழு வினியில் வாழுஞ்
சித்திவிநா யகமுதலே யாடி ரூஞ்சல்.

ஆதார சத்தியொடு மனந்த னேந்து
மதன்தன்மை பீட முறு பதும மீதில்
தாதாரும் வாமாதி சத்தி போற்றத்
தயங்கிரவி மதியனநல் சத்தி யாகும்
மீதான மண்டலத்தின் மேலே தங்கி
மெய்யடியார்க் கடியர் பவ வினைகளான
தீதான திரியநெழு வினியில் வாழுஞ்
சித்திவிநா யகமுதலே யாடி ரூஞ்சல்.

அரிபிரமர் மலர்சிதற வமரர் கோனு
மழலவனு மடப்பையொடு தீபந் தாங்க
வருநிருதி யமனுடைவாள் பிரம்பொ டோங்க
வருணனொடு வளிசிவறி வட்ட மேந்த
இரவிசசி கவிகைகோ டங்கிருபால் மேவ
இயக்கர்பதி யீசான னமரர் போற்றத்
திருமறைமா முனிவரர் கரவென் றேத்தச்
சித்திவிநா யகமுதலே யாடீருஞ்சல்.

அந்தரதுந் துபிமுழங்க வியங்க ளார்ப்ப
அமரர்மறை முனிவர்தரு மலர்கள் தூற்ற
பந்தமறு தும்புருநா ரதர்கள் பாடப்
பரிவினொடு மரமகளிர் நடனமாட
வந்தரம்பை ஊர்வசிவெண் கவரி நீட்ட
மகிழ்ந்து திலோத் தமையருகே வடந்தொட்டாட
சிந்தையருள் பொழிந் நெழு வினியில் வாழுஞ்
சித்திவிநா யகமுதலே யாடீருஞ்சல்.

ஐங்கரனே யுமைமகனே யாடீருஞ்சல்
அருளொளுகு கயமுகனே யாடீ ருஞ்சல்
சங்கரனார் திருமகனே யாடீ ருஞ்சல்
சதுர்வேத முழுமுதலே யாடீ ருஞ்சல்
தங்குபுவி நீரனல்கால் விசும்பொ டான்மாச்
சசியிரவி யென்னுமட்ட மூர்த்தி யாகுந்
திங்களணி திருமுடியா யாடீ ருஞ்சல்
சித்திவிநா யகமுதலே யாடீ ருஞ்சல்.

அந்தணரா வினமரசர் வணிகர் வாழி
அவனிமழை பொழிந்து வேளாளர் வாழி
புந்திமகிழ் சிவனடியா ரெவரும் வாழி
பொருவில்சைவ சித்தாந்த நெறியும் வாழி
செந்திருநா மகளருளிங் கெங்குங் வாழி
திருநீறும் மஞ்செழுத்துஞ் சிறந்து வாழி
சிந்துவளர் நெடுந்தீவி லடியார் வாழி
சித்திவிநாய யகரடிகள் வாழி வாழி.

* * *

உ
சிவமயம்

**நெடுந்தீவு மேற்கு**

**ஸ்ரீ முருகவடிவேற் பெருமான் பேரில் பாடிய**

**கரமத்தைப் பதியில் திருக்கோயில் கொண்டெழுந்தருளிய**

# திருவூஞ்சல்

காப்பு

மன்றில் நடமாடுகின்ற மகிபன் தன்பால்
வானவர்கள் இரங்கிநின்று வழுத்துங்காலை
கன்றுகனல் விழியதனில் கடிதிற் தோன்றி
கந்தனெனும் பேர்படைத்த கடவுள் தன்மேல்
சென்றுதொழும் அடியார்கள் சிறந்துவாழ
செம்பொன்செய் ஊஞ்சலிடை சிறியேன்பாட
கொன்றைமலர் சடைமுடித்த பெருமான் நல்கும்
குஞ்சரமாம் ஐங்கரன்தாள் காப்பதாமே.

**ஸ்ரீமுருகவடிவேற் பெருமான்**
**திருவூஞ்சல்**

வாசுகி கார்க்கோட சங்கபால பதுமனெனும்
நாக மவை தூண தாசு
வலிமைமிகு தக்கனுயர் விட்டமாக
தேசுநிறை குளிகனவன் பருநாணாக
திருவிளங்கும் அனந்தனுயர் பலகையாக
பாசுரர்கள் போற்றும் கலைவாணி கேள்வன்
பண்பினுடன் நன்கமைத்த ஊஞ்சல் வைகி
பூசுரர்கள் தொழுதேத்திப் புகழும் வண்ணம்
பொலிவுடைய ஆறுமுகனே ஆடீ ரூஞ்சல்.

வெங்கதிரும் தண்கதிரும் கவிகை தாங்க
வெற்றிநிறை சமன்நிருதி யாலவட்டம் பற்ற
பொங்குதிரை காவிரியைப் புவியிற் கொண்ட
புண்ணியனா மிந்திரன் காளாஞ்சி யேந்த
தங்குபுகழ் நிதிக்கிறைவன் அடப்பை தாங்க
தரணியோர் புகழ்வருணன் சாமரைகள் வீச
பொங்குதிரை கடல்சூழும் நெடிய தீவில்
புகுந்துறையும் புண்ணியனே ஆடீ ரூஞ்சல்.

கலைமகளும் திருமகளும் களிப்பினோடு
கவின்நிறையும் பொன்னூஞ்சல் வடந்தொட்டாட்ட
மலைகளாம் உமைகண்கள் குளிர நோக்க
மாலவனும் மலரவனும் வணங்கி யேத்த
தலைமைபெறு பிரணவத்தின் பொருள்கள் ஆயா
சதுர்முகனைச் சிறைப்பிடித்த தன்மை உன்னி
அலைதிகழும் நதிமுடித்தோன் அருளில் நோக்கும்
அன்புருவே கரமத்தைக் கதிபதியே ஆடீரூஞ்சல்.

இந்திரனும் இமையவரும் இறைஞ்சி ஏத்த
எம்பெருமான் எழில்விழியில் இலங்கித் தோன்றி
சுந்தரஞ்சேர் சரவணத்துட் தூநீராடி
சூரனுடல் கிழித்தமரர் துயர்கள் தீர்த்து
கந்தமலை தனில்மேவிக் கழிப்பில் நீங்கி
கரமத்தை யெனும்பதியே கருத்திற் கொண்டு
வந்துதொழு மடியார்கள் வாழ வைகும்
வண்ணமுகத் தறுமுகனே ஆடீ ரூஞ்சல்.

பார்ஏத்தும் ஏர்பிடிக்கும் உழவ ரார்ப்ப
பங்கையங்கள் நிறைதடத்துக் கயல்கள் துள்ளி
தார்ஏற்றும் தருவினிறால் கிழிக்கச் செந்தேன்
தண்ணருவி வெள்ளமென்றும் தணந்து போந்து

பேராற்றும் வளத்தினுயர் நெடிய தீவில்
பெருமைதிகழ் கரமத்தைப் பதியில் வாழும்
போராற்றல் படைத்துடைய பொருளே எங்கள்
புண்ணியனே அறுமுகனே ஆடி ரூஞ்சல்.

கண்ணபிரான் செய்ததவப் பயனில் வந்த
கன்னியராம் வள்ளிதெய்வ யானை சூழ
வண்ணமயில் வாகனமேல் வடிவே லேந்தி
வருமுருகா உனதுபதம் அபய மென்றே
எண்ணிறந்த பக்தர்குழாம் இரங்கி யேத்த
எழில் திகழும் கரமத்தைப் பதியில் மேவி
வண்ணநிறை பொன்னூஞ்சல் மருவியாடும்
மலைமகள்தன் திருமகனே ஆடி ரூஞ்சல்.

தேனமர் பூங்காவிலுறை தேவ ரேத்த
செந்தேனின் இசைநிறை தும்புரு நாரதர்கள்பாட
ஈனமில்லா முனிவர்கணம் இரங்கி நிற்ப
எழில்நிறையும் மாதர்குழாம் இறைஞ்சி யேத்த
வானமுயர் சோலைதிகழ் நெடிய தீவில்
வளம்நிறைநல் கரமத்தைப் பதியில் வாழும்
கானவர்கோன் திருமகளைப் கலவி கொண்டோய்
கண்ணுதல்தன் நன்மகனே ஆடீ ரூஞ்சல்.

தார்நிறையும் விண்ணவர் பூமாரி மூடச்
சன்மார்க்க சைவநெறி தழைத்து ஓங்க
ஏர்நிறையும் கந்தருவர் கீதம் பாட
எழில்நிறையும் மாமகளிர் நடனமாட
பார்நிறையும் மறைவாணர் வேதமோத
பந்தமெல்லாந் தொண்டர்தமைப் பற்றா தோட
கார்உலவும் பூஞ்சோலை மருவி வாழும்
கரமத்தைத் திருமுருகா ஆடி ரூஞ்சல்.

இம்மையினில் சூழிடர்கள் யாவும் நீங்கி
இருப்பவரே இறைவர்பத மடைவா ரென்ற
செம்மநிலை யறியாத பிதட ரோடும்
திரிந்துழலும் அடியேனைத் தீதிருத்து மாற்றால்
கம்மெனும்நீர் கடல்சூழ்ந்த நெடிய தீவில்
கரமத்தை என்னும்பதியிற் களித்து வாழும்
அம்மையுமை திருமகனாய் அவனி யேத்தும்
அறுமுகனாம் திருமுருகா ஆடீ ரூஞ்சல்.

ஆறணிந்தோன் திருமகனே ஆடீ ரூஞ்சல்
அருள் விளங்கும் அறுமுகனே ஆடீ ரூஞ்சல்
பேறறிந்து தவமுயல்வோர் பெருமை நாடும்
பெம்மானே திருமுருகா ஆடீ ரூஞ்சல்
கூறரிய தன் குஞ்சரத்துக் கிளைய கோவே
குறமகள் மணவாளா ஆடீ ரூஞ்சல்
நீறணிந்து தொழுமடியார் நிறைந்து வாழும்
நெடுந்தீவுக் கொருமுதலே ஆடீ ரூஞ்சல்

கோலமயில் வாகனமும் குலவி வாழி
குக்குடமாம் கொடியகனும் கூடி வாழி
சீலம்நிறை வேதியர்கள் செழித்து வாழி
செந்தமிழும் இன்னிசையும் சிறந்து வாழி
ஆலமணி மிடற்றிறைவன் அன்பிற் றந்த
அறுமுகனார் அடியவர் எந்நாளும் வாழி
தாலம்நிறை நெடுந்தீவுப் பதியும் வாழி
சண்முகனார் திருப்பதியும் தழைத்து வாழிவாழி.

* * *

12.03.2009

பாரதி பதிப்பகம்,430,காங்கேசந்துறை வீதி,யாழ்ப்பாணம். தொ.பே.இல: 021 - 222 3081